# ஆயக்குடி மரத்தடி இலவசப் பயிற்சி மையம்
# 30.06.2019
## பொதுத்தமிழ் - ஏழாம் வகுப்பு (புதிய பாடத்திட்டம்)

1. தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர் **வெ.இராமலிங்கனார்.**
2. காந்தியக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் **வெ.இராமலிங்கனார்**
3. தமிழகத்தில் முதல் அரசவைக் கவிஞர் **வெ.இராமலிங்கனார்**
4. மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர், பாடல்கள், என் கதை, சங்கொலி ஆகிய நூல்களை எழுதியவர் **வெ.இராமலிங்கனார்.**
5. "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" - இப்பாடலை பாடியவர் **வெ.இராமலிங்கனார்**
6. "அருள்நெறி அறிவைத் தரலாகும்" -இவ்வடியில் நெறி என்னும் சொல்லின் பொருள் **வழி**
7. "மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்" - இவ்வடி இடம்பெறும் நூல் **தொல்காப்பியர்**
8. சொல்லும் பொருளும்
   விசும்பு - வானம், மயக்கம் - கலவை, மரபு - வழக்கம், வழாஅமை - தவறாமை, தழாஅல்-தழுவுதல்
9. **இளமைப் பெயர்கள்** / **ஒலி மரபு**

| இளமைப் பெயர்கள் | | | ஒலி மரபு | | |
|---|---|---|---|---|---|
| புலி | - | பறழ் | புலி | - | உறுமும் |
| சிங்கம் | - | குருளை | சிங்கம் | - | முழங்கும் |
| யானை | - | கன்று | யானை | - | பிளிறும் |
| மாடு | - | கன்று | மாடு | - | கதறும் |
| கரடி | - | குட்டி | கரடி | - | கத்தும் |

10. தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப்பழமையான இலக்கண நூல் **தொல்காப்பியம்**
11. தொல்காப்பியம் **3 அதிகாரங்களும்,** ஒவ்வொரு அதிகாரமும் 9 இயல்களைக் கொண்டது.
12. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும் - என்றவர் **மு.வரதராசனார்**
13. மொழியில் உயிர்நாடியாக விளங்குவது **பேச்சுமொழி**



More Study Materials Visit: www.tnpscjob.com

14. சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால், பொருள் வேறுபடும் என்பதை,
"எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமில் சிறிது உளவாகும்" என்று குறிப்பிடுவது **நன்னூல்**

15. பேச்சு மொழியை **உலக வழக்கு** என்றும், எழுத்து மொழியை **இலக்கிய வழக்கு** என்றும் கூறுவர்

16. மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை **வட்டார மொழி** என்பர்.

17. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அ∴து **இரட்டை வழக்கு மொழி** எனப்படும்.

18. பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாட்டை தொல்காப்பியர் **உலக வழக்கு, செய்யுள் வழக்கு** என்று கூறியுள்ளார்.

19. ஒலியின் வரிவடிவம் **எழுத்து** ஆகும்.

20. மொழியின் முதல் நிலை **பேசுதல், கேட்டல்** இரண்டாம் நிலை **படித்தல், எழுதுதல்**

21. தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் **கன்னடம், தெலுங்கு, மலையாளம்**

22. கூற்று : தமிழை இரட்டை வழக்கு மொழி என்பர்
காரணம் : தமிழில் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடு உண்டு.

23. **சொலவடைகள்** என்பவை சிறுசிறு தொடர்களாக வட்டாரப் பேச்சு வழக்கில் வழங்கி வருபவை.

24. தமிழில் எழுத்துக்களைக் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் அசைச் சொற்கள்
    - குறில் எழுத்துக்களைக் குறிக்க **"கரம்"**
    - நேடில் எழுத்துக்களைக் குறிக்க **"கான்"**
    - குறில், நெடில் எழுத்துக்களைக் குறிக்க **"காரம்"**
    - ஆய்த எழுத்தைக் குறிக்க **"கேனம்"**

25. நெடில்தொடர் குற்றியலுகரம் - பாகு, மாசு, பாடு, காது, ஆறு
உயிர் தொடர் குற்றியலுகரம் - அரசு, கயிறு, ஒன்பது, வரலாறு
ஆய்தத்தொடர் குற்றியலுகரம் - அ∴து, எ∴கு
வன்தொடர் குற்றியலுகரம் - பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று
மென்தொடர் குற்றியலுகரம் - பங்கு, மஞ்சு, பண்பு, பந்து, அம்பு, கன்று
இடைத்தொடர் குற்றியலுகரம் - எய்து, மார்பு, சால்பு, மூழ்கு

26. **"வ்"** என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.

27. **சு, டு, று** ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்களும் இல்லை.



More Study Materials Visit: www.tnpscjob.com

28. குற்றியலுகரம் **இரண்டு இடங்களில் மட்டும்** வரும்.

1. யகரத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்கள் வரும்போது

( நாடு + யாது = நாடியாது)

2. மியா என்ற அசைச்சொல் வரும்போது

( கேள் + மியா = கேண்மியா)

29. குற்றிய லுகரம் = **குறுமை + இயல் + உகரம்**

குற்றிய லிகரம் = **குறுமை + இயல் + இகரம்**

30. **குற்றியலிகரம்** தற்போது உரைநடை வழக்கில் இல்லை. இலக்கியங்களில் மட்டும் உள்ளது.

31. **சொல்லும்** **பொருளும்**

| | | |
|---|---|---|
| 1. முழவு | - | இசைக்கருவி |
| 2. செஞ்சொல் | - | திருந்திய சொல் |
| 3. வள்ளைப்பாட்டு | - | நெல்குத்தும்போது பெண்களால் பாடப்படும் பாடல் |
| 4. நன்செய் | - | நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம் |
| 5. புன்செய் | - | குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம் |

32. தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் கவிஞர் **வாணிதாசன்**

33. வாணிதாசனின் இயற்பெயர் **அரங்கசாமி என்ற எத்திராசலு**

34. வாணிதாசன் **பாரதிதாசனின்** மாணவர்

35. **கவிஞரேறு, பாவலர்மணி** போன்ற சிறப்புப்பெயர்கள் பெற்றவர் வாணிதாசன்.

36. தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லவர் **வாணிதாசன்**

37. பிரெஞ்சு அரசின் செவாலியர் விருது பெற்றவர் **வாணிதாசன்**

38. **தமிழச்சி, தொடுவானம், கொடிமுல்லை, எழிலோவியம், குழந்தை இலக்கியம்** - முதலியன வாணிதாசனின் நூல்கள்

39. அதிமதுரம் - மிகுந்தசுவை நச்சரவம் - விடமுள்ள பாம்பு

40. காபடைக் குறிக்கும் வேறு பெயர்கள்

கா, கால், கான், கானகம், அடவி, அரண், ஆரணி

புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம்

முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை

இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில், அறல்,

பதுக்கை, கணையம்



More Study Materials Visit: www.tnpscjob.com

41. **சுரதா**

1. சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன்
2. பாரதிதாசன் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர்
3. உவமைகளை பயன்படுத்தி கவிதைகள் எழுதுவதில் வல்லவர்
4. உவமைக் கவிஞர் என அழைக்கப்படுபவர்
5. தேன்மழை, துறைமுகம், அமுதும் தேனும் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

42. தமிழ்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய வனவிலங்கு காப்பகம் **முண்டந்துறை புலிகள் காப்பகம்.** இது 895 சதுர கி.மீ பரப்பளவு கொண்டது.

43. உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன.

1. ஆசிய யானை    2. ஆப்பிரிக்க யானை

44. ஆசிய யானைகளில் ஆண் யானைக்குத் தந்தம் உண்டு.
பெண் யானைக்குத் தந்தம் இல்லை
ஆப்பிரிக்க யானைகளில் இரண்டுக்குமே தந்தம் உண்டு.

45. i) யானைகள் எப்பொழுதும் கூட்டமாகத்தான் வாழும்
ii) இந்த கூட்டத்திற்கு ஒரு பெண் யானைதான் தலைமை தாங்கும்.
iii) ஒரு யானை நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகள் உட்கொள்ளும். 65 லிட்டர் தண்ணீர் அருந்தும்.
iv) நினைவாற்றல் மிகுந்த விலங்கு யானை

46. i) புலி தனித்து வாழும் இயல்புடையது
ii) இரவில் மட்டுமே வேட்டையாடும் தன்மை கொண்டது.
iii) ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும்.
iv) கருவுற்ற புலியானது 90 நாட்களில் குட்டிகள் ஈனும்.
v) புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை.

47. புலிதான் ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் **குறியீடு.**

48. நன்கு வளர்ந்த கரடியின் எடை **160 கிலோ.** கரடி "அனைத்துண்ணி" என அழைக்கப்படுகிறது. **கரையான்** மிகவும் பிடித்த உணவு.

49. இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் "கிர்" சரணாலயத்தில் மட்டுமே ஆசியச் சிங்கங்கள் உள்ளன.



More Study Materials Visit: www.tnpscjob.com

50. கூற்று : இயற்கை விஞ்ஞானிகள் புலியையே காட்டுக்கு அரசன் என்கிறார்கள்.
காரணம் : நீளம், உயரம், பருமன், எடை, பலம், வேட்டைத்திறன் ஆகிய அனைத்திலும் சிங்கத்தை விட புலியே உயர்ந்தது.

51. இந்தியாவில் சருகுமான், மிளாமான், வெளிமான் எனப் பல வகையான மான்கள் உள்ளன. புள்ளிமான்கள் அழகில் சிறந்தவை.

52. தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் **மேட்டுப்பாளையம்**

53. வனவியல் - பட்டபடிப்புகள் உள்ள பல்கலைக்கழகம்
**கோவை - தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்**

54. "இந்தியாவின் வனமகன்" என்று அழைக்கப்படுபவர் அஸ்ஸாம் மாநிலத்தின் ஜோர்விராட் மாவட்டத்தைச் சேர்ந்த **ஜாதவ்பயேங்**

55. "காட்டின் வளம்" என்று குறிக்கப்படுவது **புலிகள்**

56. 2012 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ஜாதவுக்கு **"இந்திய வனமகன்" (Forest Man of India)** என்னும் பட்டத்தை வழங்கியுள்ளது.

57. ஜாதவுக்கு 2015ம் ஆண்டு இந்திய அரசு **பத்மஸ்ரீ** விருதை வழங்கியுள்ளது.

58. கௌகாத்தி பல்கலைக்கழகம் **"மதிப்புறு முனைவர்"** பட்டம் ஜாதவுக்கு வழங்கியுள்ளது.

59. சொற்களில் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் வரும்போது ஐகார எழுத்து தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.
முதலில் வரும்போது 1 ½ மாத்திரை அளவிலும்
இடை, இறுதியில் வரும்போது 1 மாத்திரை அளவிலும் ஒலிக்கும்.

60. **ஔகாரம்** சொல்லின் முதலில் மட்டும் வரும். இடையிலும், இறுதியிலும் வராது.

61. "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" - என்று பெருமையை போற்றியவர் **ஔவையார்.**

62. கடற்பயணம் சென்று கரை திரும்பத் தமிழர் கண்ட தொழில் நுட்பமே **கலங்கரை விளக்கம்**

63. மதலை - தூண் நெகிழி - தீச்சுடர் அழுவம் - கடல்
சென்னி - உச்சி உரவுநீர் - பெருநீர்ப்பரப்பு கரையும் - அழைக்கும்

64. வேயாமாடம் - வைக்கோள் போன்றவற்றால் வேயப்படாது, திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம்

65. உள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசுபெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது **ஆற்றுப்படை இலக்கியம்** ஆகும்.

66. பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் **தொண்டைமான் இளந்திரையன்.**



More Study Materials Visit: www.tnpscjob.com

67. பத்துப்பாட்டில் உள்ள பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களை இயற்றியவர் **கடியலூர் உருத்திரங்கண்ணனார்.**

68. உரு - அழகு வங்கம் - கப்பல் எல் - பகல்
வங்கூழ் - காற்று போழ - பிளக்க கோடுஉயர் - கரை உயர்ந்த

69. நீகான் - நாவாய் ஓட்டுபவன்
மாடஒள்ளெரி - கலங்கரை விளக்கம்

70. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது **கடல்**

71. மருதத்திணை பாடுவதில் வல்லவர் மருதன் **இளநாகனார்**

72. **நெடுந்தொகை** என அழைக்கப்படுவது அகநானூறு.

73. "முந்நீர் வழக்கம்" எனக் கடற்பயணத்தை குறிப்பிடும் நூல் **தொல்காப்பியம்**

74. திருவள்ளுவர் காலத்திலேயே பெரிய கப்பல்கள் இருந்தன என்பதற்கு சான்றாக விளங்கும் குறள்
"கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து"

75. பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பட்டன என்பதை விளக்கும் நூல் **பட்டினப்பாலை**

76. பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிகண்டு நூல் **சேந்தன் திவாகரம்**

77. "உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்" என்று பெரிய கப்பலை **அகநானூறு** குறிப்பிடுகிறது.

78. "அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங் கலி வங்கம்" - என்கிறது **பதிற்றுப்பத்து**

79. சிறிய நீர்நிலைகளைக் கடக்க பயன்படுத்தப்பட்டவை **தோணி, படகு, ஓடம், புனை, மிதவை, தெப்பம்**

80. பெரிய நீர்நிலைகளைக் கடக்க **கலம், வங்கம், நாவாய்** முதலியவை பயன்படுத்தப்பட்டன.

81. நியூசிலாந்து நாட்டு வெலிங்டன் அருங்காட்சியகத்தில் பழங்காலத் தமிழ்நாட்டுக் கப்பல்களில் பயன்படுத்தப்பட **மணி** ஒன்று இடம்பெற்றுள்ளது.

82. கப்பல் கட்டும் கலைஞர்கள் **கம்மியர்** என்று அழைக்கப்பட்டனர்.

83. "கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய்" என்கிறது **மணிமேகலை.**

84. **"கண்ணடை"** என்பது இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ஆகும்.

85. **"தச்சுமுழம்"** என்பது நீட்டலளவை.

86. மரத்தினாலான ஆணிகளைத் **"தொகுதி"** என்பர்.



More Study Materials Visit: www.tnpscjob.com

87. காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள் **பாய்மரக் கப்பல்கள்** எனப்பட்டன.

88. பாய்மரக் கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும்பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என கூறுகிறது **பரிபாடல்.**

89. **கப்பலின் உறுப்புக்கள்**

எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம்

90. கப்பலின் முதன்மை உறுப்பாகிய அடிமரம் **"எரா"** எனப்படும்.

91. குறுக்கு மரம் **பருமல்**

92. கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி **சுக்கான்.**

93. கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு **நங்கூரம்.**

94. கப்பல் செலுத்துபவரை **மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி** முதலிய பெயர்களால் அழைப்பர்.

95. சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பலில் பயன்படுத்தினர் என்று **கப்பல் சாத்திரம்** என்னும் நூல் குறிப்பிடுகிறது.

96. "நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி

வளி தொழில் ஆண்ட உரவோன் மருக" என தமிழர்கள் கப்பல் செலுத்தும் முறையை புறப்பாடல் வழி குறிப்பிட்டுள்ளவர் **வெண்ணிக்குயத்தியார்.**

97. கலம் என்றால் கப்பல், கரைதல் என்றால் அழைத்தல். கப்பலை அழைக்கும் விளக்கு **கலங்கரை விளக்கம்** எனப்பட்டது.

98. "கலம் தந்த பொற்பரிசம்

கழித்தோணியால் கரை சேர்க்குந்து" என்கிறது **புறநானூறு.**

99. "ஆங்கிலேயர் கட்டிய கப்பல்களைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பழுதுபார்க்க வேண்டும். ஆனால் தமிழர் கட்டிய கப்பல்களை ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் பழுதுபார்க்க வேண்டிய அவசியமில்லை" என்று கூறிய ஆங்கிலேயர் **வாக்கர்.**

100. அறிவியல் புனைகதைகளின் தலைமகன் என்று புகழப்படுபவர் **ஜூல்ஸ் வெர்ன்**

101. எண்பது நாளில் உலகத்தைச் சுற்றி, பூமியின் மையத்தை நோக்கிய ஒரு பயணம் உள்ளிட்ட பல புதினங்களைப் படைத்துள்ளவர் **ஜூல்ஸ்வெர்ன்**

102. "ஆழ்கடலின் அடியில்" என்ற புதினத்தின் ஆசிரியர் **"ஜூல்ஸ் வெர்ன்"**

103. **இலக்கண வகைச்சொற்கள் :**

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், இலக்கிய வகை சொற்கள்



More Study Materials Visit: www.tnpscjob.com

**இலக்கிய வகைச் சொற்கள்**

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்

104. வட சொற்களைத் **தற்சமம், தற்பவம்** என இருவகையாகப் பிரிப்பர்.

105. பாரதிதாசன்

i) கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர்

ii) இவர் கவிதை, கதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றைப் படைப்பதில் வல்லவர்.

iii) பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, இசையமுது, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிகாப்பியம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

iv) இவர் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்கு சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது.

106.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கழனி | - | வயல் | நிகர் | - | சமம் |
| பரிதி | - | கதிரவன் | முகில் | - | மேகம் |
| வெற்பு | - | மலை | எத்தணிக்கும் | - | முயலும் |

107. கற்றவர்க்கு அழகு கல்வியே

"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்

மற்றோர் அணிகலம் வேண்டாவாம்" - என்றவர் - **குமரகுருபரர்**

108. நீதிநெறி விளக்கம் - ஆசிரியர் - குமரகுருபரர். இந்நூலில் 102 பாடல்கள் உள்ளன.

109. குமரகுருபரர் 17ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் தமிழுக்கு பெருமை சேர்க்கும் பல சிற்றிலக்கியங்களை படைத்துள்ளார்.

110. கந்தர்கலிவெண்பா, கயிலைக்கலம்பகம், சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ஆகியன படைத்தவர் **குமரகுருபரர்.**

111. பள்ளித்தல மனைத்தும் கோயில் செய்குவோம்;

எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்" என்றவர் - **பாரதியார்.**

112. திருக்குறள் வகுப்புகள் நடத்தியும், தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திருக்குறளைப் பரப்பும் பணி செய்தவர் **திருக்குறளார் வீ.முனிசாமி**

113. நகைச்சுவை ததும்பும் பேச்சால் மக்களைக் கவர்ந்தவர். வள்ளுவர் காட்டிய விதி, திருக்குறளில் நகைச்சுவை ஆகிய நூல்கள் எழுதியவர் **வீ.முனிசாமி.**

114. உலகப் பொதுமறை திருக்குறள் உரைவிளக்கம், சிந்தனைக் களஞ்சியம் - எழுதியவர் **வீ.முனிசாமி.**



More Study Materials Visit: www.tnpscjob.com

115. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு முறை, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற கருத்துக்களை வலியுறுத்திச் சிறுகதை, புதினம், கட்டுரை முதலியவற்றை எழுதியவர் **சுப்ரபாரதிமணியன்.**

116. கனவு எனும் இலக்கிய இதழை நடத்தி வருபவர் **சுப்ரபாரதிமணியன்.**

117. பின்னல், வேட்டை, தண்ணீர்யுத்தம், புத்துமண், கதை சொல்லும் கலை ஆகிய நூல்களை எழுதியவர் **சுப்ரபாரதிமணியன்.**

118. நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்திமுனிவர் தமிழில் **42 ஓரெழுத்து ஒரு மொழிகள்** உள்ளன எனக் குறிப்பிடுகிறார்.

119. பகுபத உறுப்புக்கள் ஆறு வகைப்படும்.

1. பகுபதத்தின் முதலில் அமைந்து முதன்மையான பொருளைத் தருவது **பகுதி** ஆகும். இது கட்டளையாகவே அமையம்.
2. பகுபதத்தின் இறுதியில் அமைந்து திணை, பால் ஆகியவற்றையோ முற்று, எச்சம் ஆகியவற்றையோ காட்டுவது **விகுதி** ஆகும்.
3. பகுபதத்தின் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது **இடைநிலை** ஆகும்.
4. பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து **சந்தி** எனப்படும்.
5. பெரும்பாலும் இடைநிலைக்கும், பகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் **சாரியை** எனப்படும்.
6. பகுதி, விகுதி சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் **விகாரம்** எனப்படும்.

120.
| | | |
|---|---|---|
| பெயர்ப் பகாப்பதம் | - | நிலம், நீர், காற்று, நெருப்பு |
| வினைப் பகாப்பதம் | - | நட, வா, படி, வாழி |
| இடைப் பகாப்பதம் | - | மன், கொல், தில், போல் |
| உரிப்பகாப்பதம் | - | உறு, தவ, நனி, நழி |

121. பகுபதமாக அமையும் பெயர்ச்சொல் **பெயர்ப்பகுபதம்** ஆகும். இதனை பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என ஆறு வகைப்படுத்துவர்.

122. தேனரசன்

i) வானம்பாடி, குயில், தென்றல் போன்ற இதழ்களில் கவிதைகள் எழுதியவர்.

ii) இவரது கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள் எள்ளல் சுவையோடு வெளிப்படும்.

iii) மண்வாசல், வெள்ளை ரோஜா, பெய்து பழகிய மேகம் ஆகிய கவிதை நூல்களை எழுதியவர்.

iv) தமிழாசிரியராகப் பணியாற்றியவர்



More Study Materials Visit: www.tnpscjob.com

123. நெடி - நாற்றம்; மேனி - உடல்; மழலை - குழந்தை

124. வண்கீரை - வளமான கீரை பரி - குதிரை

முட்டப்போய் - முழுதாகச்சென்று கால் - வாய்க்கால், குதிரையின் கால்

மறித்தல் - தடுத்தல் (மண்ணை வெட்டித் தடுத்துப் பாத்தி கட்டுதல்)

125. "வண்கீரைப் பாத்தியுடன் ஏறப் பரியாருமே" - கீரைப்பாத்தியும் ஏறிப்பயணம் செய்யும் குதிரையும் ஒன்றாகும் என்றவர். **காளமேகப்புலவர்.**

126. தஞ்சைப்பெரியகோவிலில் உள்ள ஓவியங்கள் நாயன்மார்களில் ஒருவரான **சுந்தரரின்** வாழ்க்கை நிகழ்வுகளாக வரையப்பட்டுள்ளது.

127. ஓவியம் வரையப் பயன்படும் துணியை **எழினி, திரைச்சீலை, கிழி, படாம்** என அழைப்பர்.

128. துணி ஓவியங்கள் - **கலம்காரி ஓவியங்கள்** என்னும் பெயரில் தமிழகத்திலும் ஆந்திராவிலும் ஓவியர்கள் வரைந்து வருகின்றனர்.

129. ஓலைச் சுவடிகளிலுள்ள ஓவியங்கள் பெரும்பாலும் **இதிகாசம் மற்றும் புராணக் காட்சிகளாகவே** இருந்துள்ளது.

130. ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினர் என்ற செய்தி **பரிபாடலில்** இடம் பெற்றுள்ளது.

"இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்

துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும்"

131. தந்த ஓவியங்கள் அதிகமாக காணப்படும் மாநிலம் **கேரளா.**

132. கண்ணாடி ஓவியங்களை உருவாக்கும் ஓவியர்கள் மிகுதியாக உள்ள இடம் **தஞ்சாவூர்.**

133. **தாள் ஓவியங்கள்** கரிக்கோல், நீர் வண்ணம், எண்ணெய் வண்ணம் ஆகியவற்றை கொண்டு வரைகின்றனர்.

134. கருத்துப்பட ஓவியங்களை முதன்முதலில் தமிழில் அறிமுகப்படுத்தியவர் - **பாரதியார் (இந்தியா இதழில்)**

135. **நாட்காட்டி ஓவியம்** வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் **கொண்டையராஜு**

136. நாட்காட்டி ஓவியங்களை **பசார் பெயிண்டிங்** என்றும் அழைப்பர்.

137. **வேறுபெயர்கள்**

| | | |
|---|---|---|
| ஓவியம் | - | ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி. |
| ஓவியம் வரைபவர் | - | கண்ணுள் வினைஞர், ஓவியப்புலவர், ஓவமாக்கள், கிளவிவல்லோன், சித்திரக்கவிஞர், வித்தகர் |
| ஓவியக்கூடம் | - | எழுதொழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திரமாடம், சித்திர மண்டபம், சித்திரசபை |



More Study Materials Visit: www.tnpscjob.com

138. தமிழ்ப்பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு - 1981 - தஞ்சை
உ.வே.சா. நூலகம் தொடங்கப்பட்ட ஆண்டு - 1942 - சென்னை
கீழ்த்திசை நூலகம் தொடங்கப்பட்ட ஆண்டு - 1869 - சென்னை
கன்னிமாரா நூலகம் தொடங்கப்பட்ட ஆண்டு - 1896 - சென்னை

139. திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்ட ஆண்டு 2000. கன்னியாகுமரி உலகத் தமிழ்ச் சங்கம் திறந்து வைக்கப்பட்ட ஆண்டு 2016 - மதுரை.

140. உ.வே.சா. நூலகத்தில் 2128 ஓலைச்சுவடிகளும், 2941 தமிழ் நூல்களும் உள்ளன.

141. உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற்ற ஆண்டு 1981.

142. **தொழிற்பெயர்** எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் காட்டாது. படர்க்கை இடத்தில் மட்டும் வரும்.

143. தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி, சி, வி, மை போன்றவை - **தொழிற்பெயர் விகுதிகள்.**

144. பொருத்துதல்

1. கற்கும் முறை - பிழையில்லாமல் கற்றல்
2. உயிர்க்கும் கண்கள் - எண்ணும் எழுத்தும்
3. விழுச்செல்வம் - கல்வி
4. எண்ணித்துணிக - செயல்
5. கரவா கரைந்துண்ணும் - காகம்

145. மடமகள் - இளமகள்
புகவா - உணவாக

146. "ஒன்றொரு முன்றிலோ இல்" என்பதன் பொருள் "ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை".

147. முன்றில் - வீட்டின் முன் இடம் (திண்ணை)

148. குழி - நில அளவைப் பெயர்
சாண் - நீட்டல் அளவைப்பெயர்
மணி - முற்றிய நெல்
சீலை - புடவை

149. பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப் பாடல்களை மலை அருவி என்னும் நூலாக தொகுத்தவர் கி.வா.ஜெகநாதன்.

150. "வாய்மொழி இலக்கியம்" எனப்படுவது நாட்டுப்புறப்பாடல்.

151. பாண்டியர்களின் இரண்டாவது தலைநகரம் திருநெல்வேலி.



More Study Materials Visit: www.tnpscjob.com

152. "திக்கெல்லாம்புகழுனும்" திருநெல்வேலி என்று திருஞானசம்பந்தரும்

"தண்பொருளுரைப் புனல் நாடு" என்று சேக்கிழாரும்

திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியுள்ளனர்.

153. "பொதியிலாயினும் இமய மாயினும்

பதியெழு அறியாப் பழங்குடி" - என்றவர் **இளங்கோவடிகள்**

154. திரிகூடமலை - குற்றாலமலை

155. முற்காலத்தில் திருநெல்வேலிக்கு வேணுவனம் என்னும் பெயரும் இருந்துள்ளது.

**- மூங்கில் காடு.**

156. பொருத்துக

1. நாற்று - நடுதல், பறித்தல்
2. நீர் - பாய்ச்சுதல்
3. நெல் - பெறுதல்
4. போர் - அடித்தல்
5. களை - பறித்தல்
6. கதிர் - அறுத்தல்

157. நெல்லிக்காய் உற்பத்தியில் தமிழகத்தில் **நெல்லை மாவட்டம்** முதலிடம் வகிக்கிறது.

158. **காவற்புரை** என்றால் சிறைச்சாலை.

159. இரட்டை நகரங்கள் என அழைக்கப்படும் நகரங்கள் திருநெல்வேலி, பாளையங்கோட்டை.

160. கொற்கையின் முத்துக்களை

1. "முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுரை" என்கிறது - நற்றிணை.
2. கொற்கையில் பெருந்துறை முத்து - அகநானூறு

161. **தண்பொருநை நதி** என அழைக்கப்பட்டது தாமிரபரணி ஆறு.

162. திருநெல்வேலிச் சீமையில் பிறந்த சங்ககாலப் புலவர்கள் மாறோக்கத்து நப்பசலையார், நம்மாழ்வார், பெரியாழ்வார், குமரகுருபரர், திரிகூடராசப்பக்கவிராயர், கவிராசப்பண்டிதர்

163. தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு எனப்படுவது **பாளையங்கோட்டை.**

164. வணிகம் நடைபெறும் பகுதியைப் **பேட்டை** என வழங்குதல் மரபு.

165. **திருநெல்வேலிச் சீமை** என்று குறிப்பிடப்படுவது இன்றைய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி இணைந்த பகுதியாகும்.



More Study Materials Visit: www.tnpscjob.com

166. கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக்காவியர், குற்றாலமுனிவர் என்றெல்லாம் புகழப்படுபவர் **டி.கே.சிதம்பரநாதர்(இரசிகமணி).**

167. தமது வீட்டில் வட்டத்தொட்டி என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தவர் **டி.கே.சி.**

168. ஒரு பாடலில் உவமையும், உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது **உவமை அணி.**

169. **உவம உருபுகள் :** போல, புரைய, அன்ன, இன்ன,
அற்று, இற்று, மான, கடுப்ப,
ஒப்ப, உறழ போன்றவை

170. உவமை ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் வந்து உவமஉருபு மறைந்து வந்தால் அது **எடுத்துக்காட்டு உவமை அணி.**

171. உலகில் இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவது **இல்பொருள் உவமைஅணி**

172. சிற்றில் - சிறுவீடு
கல்அளை - கற்குகை
யாண்டு - எங்கே

173. "ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" - என்றவர்
**காவற்பெண்டு** (புறநானூறு)

174. காவற்பெண்டு சங்ககாலப் **பெண்பாற்புலவர்களுள்** ஒருவர்.

175. சாலம் - பாசாங்கு
மூர்ச்சை - மயக்கம்
சலாம் - வணக்கம்
பதைத்து - நடுங்கி

176. செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஒரு குறுநிலப் பகுதியை ஆண்டு வந்தவர் சொரூபசிங், அவரது மகன் **தேசிங்குராசன்.**

177. யாராலும் அடக்க முடியாத குதிரை-நீலவேணியை அடக்கியவன் **தேசிங்குராசன்**

178. "முத்துராமலிங்கரின் வீரம்மிக்க பேச்சு விடுதலைப்போருக்கு மிகவும் உதவும்" என்று பாராட்டியவா **காமராசர்.**

179. வடஇந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத்தடை விதிக்கப்பட்ட தலைவர் **பாலகங்காதரதிலகர்** தென்னாட்டில் பேச தடைவிதிக்கப்பட்ட தலைவர் **முத்துராமலிங்க தேவர்.**

180. தன் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கினைச் சிறையில் கழித்த தியாகச் செம்மல் **முத்துராமலிங்கர்.**



More Study Materials Visit: www.tnpscjob.com

181. **முத்துராமலிங்கரின் சிறப்புப் பெயர்கள்**

தேசியம் காத்த செம்மல், வேதாந்த பாஸ்கர், பிரணவகேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்தசமய மேமை

182. தென்னாட்டுச் சிங்கம் - **முத்துராமலிங்கர்**

183. அவர் பேசத்தொடங்கியதும் சிங்கத்தின் முழக்கம் போலவே இருந்தது என்று முத்துராமலிங்கரை பாராட்டியவா **அண்ணா.**

184. "முத்துராமலிங்கரின் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது உதடுகளிலிருந்து அல்ல" என்றவர் **இராஜாஜி.**

185. முத்துராமலிங்கர் **"நேதாஜி"** என்ற வாரஇதழை நடத்தினார்.

186. முத்துராமலிங்கர் முதன் முதலில் உரையாற்றிய ஊர் **சாயல்குடி.**

187. சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்தபிணம் உயிர்பெற்று எழும். புரட்சி ஓங்கும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலைபெறும்" என்றவர் - சிதம்பரனாருக்கு இரட்டை வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கிய நீதிபதி - பின்ஹே

188. சொல்லின் செல்வர் எனப் போற்றப்படுபவர் **இரா.பி.சேதுப்பிள்ளை.**

189. செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டுவந்தவர் **இரா.பி.சேது**

190. **தமிழின்பம்** இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற முதல் நூல்.

191. ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ்விருந்து, தமிழகம்- ஊரும் பேரும், மேடைப்பேச்சு உள்ளிட்ட நூல்களை எழுதியவர் **இரா.பி.சேது.**

192. எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை **வழக்கு.**

193. வழக்கு இருவகை. **1. இயல்பு வழக்கு 2. தகுதி வழக்கு**

194. **இயல்பு வழக்கு**

1. இலக்கணமுடையது 2. இலக்கணபோலி 3. மரூஉ

**தகுதி வழக்கு**

1. இடக்கரடக்கல் 2. மங்கலம் 3. குழூஉக்குறி

195. இலக்கணமுடையது - நிலம், மரம், வான், எழுது

இலக்கணபோலி - புறநகர், கால்வாய், தசை, கடைக்கண்

மரூஉ - கோவை, குடந்தை, எந்தை, போது, சோணாடு

இடக்கரடக்கல் - கால் கழுவி வந்தான்

குழந்தை வெளியே போய்விட்டது

ஒன்றுக்குப் போய் வந்தேன்

ஆயக்குடி மரத்தடி இலவசப் பயிற்சி மையம்



More Study Materials Visit: www.tnpscjob.com

மங்கலம் - ஓலை - திருமுகம்
கறுப்பு ஆடு - வெள்ளாடு
விளக்கை அணை - விளக்கை குளிரவை
சுடுகாடு - நன்காடு

குழூஉக்குறி - பொன்னைப்பறி எனல்
ஆடையைக் காரை எனல்

196. சொல்லின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ இயல்பாக இருக்க வேண்டிய ஓர் எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து இடம்பெற்று அதே பொருள் தருவது **போலி.**

197. போலி மூன்று வகைப்படும் 1. முதற்போலி 2. இடைப்போலி 3. கடைப்போலி

198. **முதற்போலி**

பசல் - பைசல் மஞ்சு - மைஞ்சு, மயல் - மையல்

**இடைப்போலி**

அமச்சு - அமைச்சு இலஞ்சி - இலைஞ்சி அரயர் - அரையர்

**கடைப்போலி**

அகம்-அகன் நிலம் - நிலன் முகம் - முகன் பந்தல் - பந்தர்

199. முற்றுப்போலி :- ஐந்து - அஞ்சு

200. தகளி - அகல்விளக்கு
நாரணன் - திருமால்
இடர்ஆழி - துன்பக்கடல்
சுடர்ஆழியான் - ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்

201. பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள **திருவெ.்கா** என்னும் ஊரில் பிறந்தவர்.

202. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதி பாடியவர் **பொய்கையாழ்வார்.**

203. பூதத்தாழ்வார் சென்னையை அடுத்துள்ள **மாமல்லபுரத்தில்** பிறந்தவர்.

204. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டாம் திருவந்தாதி பாடியவர் **பூதத்தாழ்வார்**

205. திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு **நாலாயிரத் திவ்விய பிரபந்தம்.** இதனைத் தொகுத்தவர் நாதமுனி.

206. ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதை **அந்தாதி** என்பர்.

207. முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச் சேர்ந்த சமணப்புலவர். இவரது காலம் 13ஆம் நூற்றாண்டு.



More Study Materials Visit: www.tnpscjob.com

208. முனைப்பாடியார் இயற்றிய **அறநெறிச்சாரம் 225** பாடல்களைக் கொண்டது.

209. "செல்வத்துப் பயனே ஈதல்"

"துய்ப்போம் எனினே தப்புந பலவே" - என்கிறது **புறநானூறு**

210. உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய் என்றவர் - **பாரதிதாசன்**

211. **ஜென்** என்னும் ஜப்பானிய மொழிச்சொல்லுக்கு **தியானம்செய்** என்பது பொருள்.

212. கண்ணதாசனின் இயற்பெயர் **முத்தையா.** இவர் **கவியரசு** என அழைக்கப்படுகிறார். தமிழக அரசவைக் கவிஞராகவும் இருந்துள்ளார்.

213. **இயேசு காவியம்** - படைத்தவர் கண்ணதாசன்.

214. கூடுகட்டத் தெரியாத பறவை - **குயில்**

215. **சே.பிருந்தா** புகழ்பெற்ற பெண்கவிஞர்களுள் ஒருவர். மழைபற்றிய பகிர்தல்கள், வீடு முழக்க வானம், மகளுக்குச் சொன்ன கதை ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

216. காயிதே மில்லத் - அவரது இயற்பெயர் **முகம்மது இசுமாயில்**

217. காயிதே மில்லத் எனும் அரபுச் சொல்லுக்கு **சமுதாய வழிகாட்டி** என்று பொருள்

218. தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் திகழ்கிறார் என்றவர் - **அறிஞர் அண்ணா.**

219. இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது, அவர் நல்ல உத்தமமான மனிதர் - என்றவர் **தந்தை பெரியார்.**

220. வேர்கள், தொலைவில் இருக்கின்றன, நேற்று வாழ்ந்தவர்கள் கடலோர வீடு, பாய்மரக் கப்பல், மீசைக்காரப்பூனை, பிரயாணம் ஆகிய நூல்களை எழுதியவர் - **பாவண்ணன்**

**பயிற்றுநர் குழு**

| | | | |
|---|---|---|---|
| P. ராமமூர்த்தி<br>9486301705 | G. முருகேசன்<br>9245833209 | K. பெரியதுரை<br>7418724575 | P. செல்வராஜ்<br>9245639613 |
| M. பூவராகவன்<br>9865248084 | K. செல்வராஜ்<br>9750291254 | S. முத்துச்சாமி<br>9442957604 | A. விக்ரமன்<br>9894952582 |



More Study Materials Visit: www.tnpscjob.com